# 3 சமய ஒழுகலாறுகள்

சமயம் என்றால் வாழும் முறைமை அல்லது வாழ்க்கை நெறி எனப்படுமென்றும் அதுஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் தெரிவிப்பனவென்றும் முன்னையவகுப்பில் அறிந்துகொண்டோம். இங்கு விழுமியங்கள் என்ற தலைப்பில் மேலும்சில விடயங்களை விளங்கிக்கொள்வோம். சைவநெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட, பண்படுத்தப்பட்ட, சீரிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அறவாழ்க்கையாக எமக்குக்காட்டுகிறது. ஒருவன் உயர்வான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வானேயானால் அவனிடத்தே ஆன்மீக ஒளி பிரகாசம் பெறுதல் இலகுவாகும்.

உயிரினும் மேலான ஒழுக்க வாழ்வின் மூலம் பெறப்பட்ட பண்புகளையும் தலையான பெறுமானங்களையும் விழுமியங்கள் எனச் சொல்லலாம். **“ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை”**என்றும், **“ஒழுக்கம் இல்லான்கண் உயர்வு இல்லை”** என்றும் சான்றோர் செப்பிய வாக்குகள் இதனை வலியுறுத்தும். நீடுவாழ்வை நிர்ணயிக்கும் விழுமியங்களால் மானிடன் உயர்கிறான். வள்ளுவப்பெருமானும் **‘பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்’** எனச் சுட்டியிருக்குமிடமும் இவ்விழுமியமே. ஒழுக்கமும் சமயமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

சமயவாழ்வின் வெற்றி, ஆன்மீக விடுதலை எல்லாமே நாம் கடைப்பிடிக்கும் விழுமியங்களில் தான் தங்கியிருக்கிறது என்றால் மிகையாகாது. நல்ல பண்பாடு, சீரிய ஒழுகலாறுகள், பழக்க வழக்கங்கள், மனித நேயப்பண்புகள், தியாக சிந்தனைகள் உடைய ஒருவன், நல்ல விழுமியங்களையுடையவனாகப் போற்றப்படுவான்.

மனித விழுமியங்களெனப் போற்றப்படும் எவையும் உலகம் தழுவிய அன்பினை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் அமையும். பொதுவாக சமயங்களனைத்தும் பாவங்களையும், தீயனவற்றையும் விலக்கி, சீரிய வாழ்க்கை வாழவேண்டிய அவசியத்தையும் தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் பிற உயிரினங்களையும் மதித்து நேசித்தலையுமே விழுமியங்களில் சிறந்ததாகக் குறித்துச் சொல்கின்றன. **“புண்ணியமாம் பாவம் போம்”**என்பதுதான் அடிப்படையான சமயநெறி எனப்பேசப்படினும், சைவநெறியென்னும்

விழுமியங்களாக மேல்வரும் விடயங்களை நாம் விசேடமாகக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.



1. சமய ஒழுகலாறுகளின் வழிநின்று சைவசமயியாக வாழ்தல்.
2. நற்பிரசையாக வாழ்தல்.
3. தான தர்மம் செய்தல்.
4. தமக்கும் சமூகத்திற்கும் உதவியாக வாழ்தல்.
5. அர்ப்பண சிந்தையுடன் வழிபாட்டில் ஈடுபடுதல்.
6. மகிழ்வான மனநிலையைச் சகலருக்கும் ஏற்படுத்தல்.
7. சமூக நோக்குடன் செயற்படுதல்.

சைவசமயம் என்பதற்கு அறிவுமயமான, அன்புமயமான தலைவனை அடைவதற்கு வழியெனப் பொருள்கொள்ளப்படும். சைவசமயத்தைச் சுத்தாத்வித சைவசித்தாந்த வைதிகசமய நன்னெறியென்று அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்துச் சொல்வதுமுண்டு. அவை ஒழுக்கத்தின் வாயிலாகப் பெறும் பேரின்பத்தைப் போற்றுபவையாகும்.

மேல்வருவன சைவசமயத்தின் சிறப்பு இலட்சணங்களாகும்.

1. அறிவை ஆதாரமாகக் கொள்வது.
2. அன்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
3. அறவொழுக்கத்தை மேலாகப் போற்றுவது.
4. சகிப்புத்தன்மையுடையது, சமநோக்குடையது.
5. இகபர நன்மைகளை ஒருங்கே பயக்கும் தன்மையது.

நமக்கு நேரே புலப்படும் உடல், உயிர், உலகம், அதனுள் இயங்கும் பொருள், இயங்காப்பொருள் ஆகியவற்றையும் நுண்ணறிவால் ஆராய்ச்சிசெய்யும் பொழுது எழுகின்ற மறை பொருளாகிய கடவுளையும், நன்மை தீமை, இன்பதுன்பம், இம்மை மறுமை ஆகிய இவற்றையும், இவற்றின் சம்பந்தமாகத் தோன்றும் பற்பல இயல்புகளையும், கொள்கைகளையும் அளந்து அறியும்படி சைவசமயமானது வற்புறுத்துகிறது. இவ்வடிப்படை ஆராய்ச்சியைத்தான்

**முப்பொருள் தத்துவம்** அல்லது **பதி, பசு, பாச** ஆராய்ச்சி எனச் **சைவசித்தாந்தம்** குறிப்பிடும்.

மெய்ப்பொருளாராய்ச்சியானது தன்னைத் தான் அறிவது. தன்னை அறிந்தவன்தான் தன் தலைவனை அறிவான். உயிரிற் புறப் பொருளை ஆராயாமல் உயிர்ப்பொருளை அறிய முடியாதென்று சித்தாந்தம் உறுதியாகச் சொல்கிறது. தற்காலத்தில் மேனாட்டு விஞ்ஞான அறிஞர்களும் தங்களுடைய நுண்ணிய ஆராய்ச்சியால் இந்த முடிவிற்கு வந்துள்ளார்கள். பரம்பொருள் சகலபொருள்களிடத்தும் ஒன்றாகியும், உடனாகியும், வேறாகியும் நிற்பதால் தன்னையும் பிறரையும் கடவுளையும் சேர்த்துப் பிடித்து ஒன்றாகக் காண்பதுதான் மெய்யறிவு எனப் புகட்டுகிறது சைவநெறி.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்** என்றும் **'அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"** என்றும் திருமந்திரம் கூறுகிறது. அன்புதான் சைவத்தின் உயிர்நிலை. மனிதன் உண்மையில் தன்னை நேசிப்பானாயின் அவன் கடவுளையும்,பிறரையும்,பிறவுயிர்களையும் நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். மேலும் மெய்யன்பாவது பிரதிப் பிரயோசனம் கருதுவதாகவும் வித்தியாசம் பார்ப்பதாகவும், செயலற்றதாகவும் இருக்காது.

**மனிதனை நடமாடும் கோயில்** என்பர். மேலும் **இயங்கும் உயிரனைத்தும் ஈசன் கோயிலாகும். எவ்வுயிரும் ஈசன் சந்நிதியாகும்** என்றும் சைவநெறி கூறுகிறது. காணப்படுகின்ற மனிதரிடத்து அன்பு இல்லாதபொழுது, ஈசனிடத்து அன்புடையோன் போல் ஒழுகுவது கேலிக்கூத்துப் போன்றதாகும்.

அறிவு, அன்பு ஆகிய இரண்டினதும் பயன் அறனும் ஒழுக்கமும் தான். மனத்துக்கண் மாசிலனாக அறநெறி நிற்றல், ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புதலாகிய தூய வழியில் கடைப்பிடித்தல் இரண்டுந்தான் மக்கட் பண்புடையார்க்கு அழகென்று சைவசமயம் வற்புறுத்துகிறது. மேலும், மனிதன் எதை நினைக்கிறானோ எதைப் பேசுகிறானோ எதை உணர்கிறானோ அவற்றின் வண்ணம் ஆகிறான் என்பதே சைவ நுண்ணறிவு.

மனம், மொழி, மெய்களை அடக்கி ஆளும் விஷயத்தில் அவசியமாக இருக்க வேண்டியவை, பயன் கருதி விழைய வேண்டியவை எனச் சைவம் சில வரையறைகளை வகுத்துமிருக்கிறது.

* அழுக்காறு , அவா, வெகுளி முதலிய மனக்குற்றங்கள்.
* இன்னாமொழிதல், புறங்கூறல், பொய் சொல்லல் முதலியவைகள்.
* களவு, கொலை, காமம், கள்ளுண்ணல், சூதாடல் முதலிய

பஞ்சமாபாதகங்கள் போன்ற தீய ஒழுக்கங்கள் தள்ளப்பட வேண்டியவையாம்.

கொள்ள வேண்டிய உத்தம குணங்களாகச் சான்றோர் மேல்வருவனவற்றை வகுத்துக்காட்டியுள்ளனர்.

* மனம், மொழி, மெய்யை அடக்குதல்.
* நல்லன நினைத்தல்.
* செய்ந்நன்றி அறிதல்.
* இனியவை கூறுதல்.
* உண்மையுரைத்தல்.
* பயனுடையன சொல்லல்.
* நூலோதுதல்.
* சுத்தமாயிருத்தல்.
* வறியோர்க்குதவுதல்.
* விருந்தோம்பல்.
* ஆபத்திலுதவுதல்.

இவற்றைவிடச் சைவநெறியானது ஒப்புமை ஒழுகல், புகழ்பட வாழ்தல், சமயாசாரங்களைக் கடைப்பிடித்தல், தவஞ்செய்தல் முதலிய சைவப் பழக்கங்களையும் தமது வாழ்வில் கைக்கொள்ள வேண்டுமென்று விதிக்கிறது.

அறிவு, அன்பு, ஒழுக்கம் இல்லாத மதங்கள் உலகத்தில் கிடையாது என்பதும், **"எல்லாம் இறைவன் செயல்" "அவனருளாலல்லாது அணுவும் அசையாது"** என்பதும் **சகல மதங்களும் இறைவன் ஆணையினின்றும் எழுந்தவையே** என்பதும் சைவநெறி காட்டும் சன்மார்க்கமாகும். கடவுள் ஒருவராக இருந்த போதிலும் அவரை வழிபடும் மதங்கள் எப்பொழுதும் பற்பலவாகத் தானிருத்தல் இயல்பே. எல்லாச் சமயங்களினிடையேயும் காணப்படும் உட்பிரிவே இதற்குச் சான்றாகும். ஆனால் சகல சமயங்களிடத்தும் கடவுளின் அருட்செயலைப் பார்க்க வேண்டும் என்பது சைவத்தின் போதனை. சைவசமயம் சகிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டது, எல்லா உயிர்களையும் நேசிப்பது.

தாய் போன்ற விசால நோக்கமும், சகிப்புத்தன்மையும், அணைத்தாதரிக்கும் பான்மையும் சைவ சமயத்தின் இயற்கையான இயல்புகளாகும்.

**யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே**

**மாதொருபாகனார் தாம் வருவர்.**

என்னும் பாடல் இங்கு எடுத்து நோக்கத்தக்கது.

இகவாழ்வுக்கும், பரவாழ்வுக்கும் ஏற்ற நெறிகளைக் காட்டி அவற்றின் வெற்றிக்கு வழிவகுப்பது சைவ நெறியாகும். மனிதன் நன்மை கருதியே தனு, கரண, புவன போகங்களை உபகரிக்கும் இறைவன், உயிர்களுக்கு யோகம் புரிதற் பொருட்டு யோகத்திருமேனியைத் தானே கொண்டு விளங்குகிறான். இகத்தின் மூலமாகத்தான் பரவாழ்வு சித்திக்கும் என்பதும் கருவியைக் கருவியாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, கருவி மூலமாக அடைய வேண்டிய பொருளை விட்டு கருவியையே பொருளாக மதித்து அங்கலாய்க்கக் கூடாது என்பதும் சைவ நெறிகாட்டும் விழுமியமாகும். பொதுவாகச் சொன்னால் மண்ணில் நல்ல வண்ணம் மானிடர் வாழவும் அவர்களின் துன்ப துயரங்களை மாற்றவும், சந்தேகங்களை நிவர்த்திக்கவும் சைவநெறியானது வழிகாட்டி நிற்கிறது.

சிவனருள் பெற்ற சமயகுரவர்கள், நாயன்மார்கள், அனுபூதிமான்கள், அருளாளர்கள், ஆன்றோர்கள் தத்தம் அனுபவத்தாற் கண்டவற்றை அருளியும், எழுதியும், தொகுத்தும், வகுத்தும் சாத்திரங்களாகத் தந்துள்ளனர். அறிவும், ஞானமும், பக்தியும், முத்தியும் சித்திக்க வழிதரும் நெறி, சைவ நெறி என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சைவ சமயம் கூறும் விழுமியங்கள் ஐந்து எழுதுக?
2. சிவவழிபாடு இகவாழ்வுக்கும், பரவாழ்வுக்கும் பயன் தருவது என்ற கருத்தை விளக்குக.
3. நற்பிரஜையாக வாழ்தல் பற்றிச் சமயம் கூற விழையும் செய்தி யாது?
4. வழக்காறுகள், மரபுகள், பாரம்பரியங்களைச் சைவநெறி எந்த வகையில் கடைப்பிடிக்கத் தூண்டுகிறது?
5. வாழ்வோடு இணைந்து வரும் சமயக்கிரியைகளையும் சடங்குகள் சிலவற்றினையும் எடுத்துக் காட்டுக?

## செயற்பாடு

01. சைவ சமயம் கற்பிக்கும் ஏதாவது ஒரு நல்ல விழுமியத்தைக் கடைப்பிடித்தவரின் வெற்றியை எடுத்துக் காட்டும் சம்பவமொன்றை வகுப்பறையில் ஒரு பேச்சாக நிகழ்த்திக் காட்டுக.

02. மேலே வலியுறுத்திய விழுமியத்தின் சிறப்பை உணர்த்த, இச் சம்பவத்தை ஒரு குறுநாடகமாக அமைத்து நடிக்குக.

## பாடச்சுருக்கம்

01. சமயமும், அறவாழ்வும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. சமயம், மனிதன் வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறைமையை வலியுறுத்துகிறது.

02. சமய ஆசாரமான வாழ்வு வாழ்பவன், மகேசனுக்குப் பிரியமானவனாகிச் சமூகத்தின் நற்பிரஜையுமாகிறான்.